# வடக்கு மாகாணசபை – பிரதம செயலாளர் செயலகம்

**வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சு மற்றும் கல்வி திணைக்களங்களிலுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை பதவிநிலை வெற்றிடங்களுக்கு அச்சேவையில் ஓய்வுபெற்ற அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்தல்.**

தற்போது வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சு மற்றும் கல்வி திணைக்களங்களிலுள்ள கீழ்காட்டப்பட்ட வெற்றிடங்களை 3/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அச் சேவைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அலுவலர்களிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதன் மூலம் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடம் காணப்படும் சேவைகளுக்குரிய வெற்றிடங்களின் விபரங்கள் வருமாறு

| ***தொ.இல*** | ***பதவி*** | ***தரம்*** |
|---|---|---|
| 01 | இலங்கை கல்வி நிர்வாக சேவை | தரம் III, II,I |

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய ஒருவருடகாலத்திற்கு அல்லது அவர்களது 67வதுபிறந்த தினத்திற்கு முந்தைய நாள் ஆகியவற்றுள் எது முந்தையதோ அதுவரை மட்டும் ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் செய்யப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வின் போது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் உடல் உள வலுவை உறுதிப்படுத்தும் அரச மருத்துவச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களையும் ஓய்வூதியக்கொடையின் உறுதிப்படுத்திய நிழற்பிரதியையும் 2019.05.06ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்பாக கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம் முன்னளிக்குமாறு கோரப்படுகின்றனர். மேலும் விண்ணப்பங்கள் நேரடியாக கையேற்கப்படமாட்டா அத்துடன் அஞ்சலில் ஏற்படும் தாமதங்களுக்கு வடமாகாண பிரதம செயலாளர் செயலகம் பொறுப்பேற்கமாட்டாது.

மாதிரி விண்ணப்ப படிவத்தினை www.np.gov.lk என்னும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய விலாசம்

பிரதம செயலாளர்
பிரதம செயலாளர் செயலகம்
வடமாகாண சபைச் செயலக வளாகம்
கண்டி வீதி
கைதடி, யாழ்ப்பாணம்

**குறிப்பு:** விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த அடிப்படையிலான விண்ணப்பம் எனத் தவறாது குறிப்பிடவும்

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடமாகாணம்
16.04.2019